011.

கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.கா.பெ.மகேஸ்வரி எம்.ஏ.பி.எட்.,

ந.க.எண்.4986/அ1/2021 நாள். /11/2023

தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – கிருஷ்ணகிரி மாவட்டம் மாவட்டக்கல்வி அலுவலகத்தில்(தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் திரு.கு.மு.இராஜசேகரன் என்பாருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது – தொடர்பாக.

பார்வை
1.அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (க்யு.1) நாள்:26.02.2021
2.அரசாணை எண்.151, பள்ளிக்கல்வி (பக1(1))த்துறை நாள்.09.09.2022.
3.அரசு கடித எண் 11968/ப.க.4(1)/2020நாள்:14.08.2020
4.கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1573/அ1/2015.நாள்.05.06.2017.
5.ஊத்தங்கரை உதவி தொடக்கக்கல்வி அலுவலர் கடித ந.கஎண்.1122/அ1/2017,நாள்:13.11.2017.
6.மத்தூர் மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.கஎண்.1902/அ2/2021,நாள்:26.08.2021.
7.கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி) அலுவலரின் கடித ந.கஎண்.908/அ1/2022 நாள்:01.08.2023 மற்றும் 06.11.2023.

==@@@@@==

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.கு.மு.இராஜசேகரன் என்பாருக்கு, கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு பெற்று பணியில் சேர்ந்த நாளான 06.06.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைவழங்க கோரி பார்வை 6 மற்றும் 7 ன் வாயிலாக கருத்துருக்கள் வரப்பெற்றது. பார்வை 2ல் காண் அரசாணையின்படி முதன்மைக்கல்வி அலுவலருக்கு, நியமன அலுவலராக அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் இக்கருத்துருக்கள் பார்வை 1ல் கண்ட அரசாணைக்குட்பட்டு நன்கு பரிசீலிக்கப்பட்டது.

பார்வை 4ல் காண் செயல்முறைகளுக்கிணங்க, இவர் கருணை அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டாரக்கல்வி அலுவலகத்தில் 06-06-2017 முற்பகல் பணி நியமனம் பெற்றுள்ளார்.01-10-2022 இல் நிர்வாக மாறுதல் பெற்று தற்போது கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி) அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

பார்வை 3ல் கண்ட அரசு கடிதத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, உரிய காலக்கெடுவிற்குள் பணிவரன்முறை செய்யக்கோரும் கருத்துருக்கள் பார்வை 5 இன்படி சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 3ல் கண்ட அரசாணைக்கிணங்க, தனியர் சமர்பித்த ஆவணங்கள், சம்மந்தப்பட்ட அலுவலரின் சான்று ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இவரின் பெயருக்கு எதிரே கலம் 4 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணைவழங்கப்படுகிறது.

| வ எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்தநாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும்நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.கு.மு.இராஜசேகரன், இளநிலை உதவியாளர் மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி) அலுவலகம்,கிருஷ்ணகிரி. | 06-06-2017 முற்பகல் | 06-06-2017 முற்பகல் |

மேலும், இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக்காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அரசு அலுவலகநடைமுறைநூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

இப்பணிவரன்முறை ஆணைகுறித்து சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் உரியபதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்/ தலைமையாசிரியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:பணிப்பதிவேடு.

முதன்மைக்கல்வி அலுவலர்
கிருஷ்ணகிரி.

பெறுதல்
திரு.கு.மு.இராஜசேகரன்,
இளநிலைஉதவியாளர்
மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி) அலுவலகம்,
கிருஷ்ணகிரி. (உரியவழியாக)
நகல்:மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி) அலுவலர்,
மாவட்டக்கல்வி(தொடக்கக்கல்வி)அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

7/12/23

HEAD MASTER I/C
Govt. Boys Hr. Sec. School,
Krishnagiri-635 001.

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner